[1993 ஏப்ரல் 12

303—

ஊஞ்சலூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தல்.

*11762—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஊஞ்சலூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : இல்லை.

307—

அந்தியூர் தொகுதியில் வனச்சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

*10083—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் தாளக்கரை முதல் செங்குளம் வரை செல்லும் வனச்சாலையினை 1992-93-ல் கற்சாலையாக மாற்றி தார்ச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் தாளக்கரை முதல் செங்குளம் வரை செல்லும் வனச்சாலையை மேலும் 3 கி.மீ. நீளத்திற்கு ரூ. 5 இலட்சம் செலவில் மேம்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.